# சீஷத்துவம்




கிறிஸ்தவ மார்க்கம், சீஷத்துவத்திற்கு நேராய் நம்மை நடத்துகிற மார்க்கம். கிறிஸ்துவாகிய தம்மை பின்பற்றுகிற சீஷர்களையே ஆண்டவர் தேடுகிறாரேயன்றி, தம்மை அப்பத்திற்காக தேடுகிற பக்தர்களை அவர் தேடவில்லை. தம்மை பின்பற்றி, தம்முடைய பரிசுத்ததிற்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு **(எபி 12:10)** நம்மை இரட்சிக்கிறாரேயன்றி வெறும் கோட்பாடுகளையோ, சடங்குகளையோ பின்பற்ற (அல்லது செய்ய) நம்மை அழைக்கவில்லை. இப்படியாக அழைக்கப்படுகிற சீஷனுடைய தன்மைகள், தகுதிகள் சிலவற்றை பின்வருமாறு காண்போம்.

**லூக் 14:27** கூறுகிறது **"தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்"**, மேலும் **மத் 16:24**, **"அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்"** என்று கூறுகிறது. மேலும் **லூக் 14:33** கூறுகிறது **"அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்"**.

மேற்கண்ட வசனங்களின் மூலம் ஆண்டவரை பின்பற்றுகிறவனே அவருடைய சீஷனாயிருப்பான் என்றும், அவரை பின்பற்றுகிறவன் தன்னையும், தனக்கு உண்டான எல்லாவற்றையும் வெறுத்துவிட வேண்டும் என்றும் காண்கிறோம்.

**லூக் 14:26** ஆம் வசனம், அவைகள் எவை என்று நமக்கு விளக்கமாக கூறுகிறது **"யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக் 14:26)**. இப்படியாய் ஆண்டவரை பின்பற்றுகிறவர்களுக்கு ஆண்டவர் கொடுக்கும் வாக்குத்தத்தம் **"என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்தியஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்" (மத் 19:29)** என்பதே.

மேலும் **யோ 8:12** கூறுகிறது **"மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்"**. ஆம் அவரை பின்பற்றும் பொழுது (சீஷனாயிருக்கும் பொழுது) நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வோம் என்பதை நாம் மேற்க்கண்ட வசனங்களில் காணலாம். இப்படியாய் ஆண்டவருடைய சீஷனாயிருக்கிறவனுடைய, **தகுதிகள்** சிலவற்றை **மாற் 3:14,15** வசனங்களில் நாம் காணலாம். **"அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார்" (மாற் 3:14,15)**.

1. **தம்மோடு கூட இருக்கவும்**: கிறிஸ்துவின் சீஷன் எப்போழுதும் ஆண்டவரோடு ஐக்கியமுடையவனாய் காணப்படுவான். **"எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" (1 யோ 1:3)**.

2. பிரசங்கம் பண்ணும்படியாக: ஆண்டவருடைய வார்த்தையை எங்கும் அறிவிக்கிறவனாய் காணப்படுவான். **“கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்” (2 கொ 2:14). “ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்” (மத் 28:19,20). “அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது” (லூக் 24:47).**

3. வியாதிகளை குணமாக்குகிற, பிசாசுகளை துரத்துகிற அதிகாரம்: **“விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்” (மாற் 16:17,18).**

மேற்கண்ட **மத் 28:19,20** வசனங்களில் நாம் காண்கிறபடி, ஒரு சீஷனுடைய பணி, சீஷர்களை உருவாக்குவதே ஆகும். மேலும் **யோ 12:26** கூறுகிறது **“ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்”**. இங்கு நாம் காண்கிறபடி ஒருவன் ஆண்டவருக்காக ஊழியம் செய்கிறவனாய் (மேற்க்கண்ட விதங்களில்) காணப்படுவானானால், அவன் ஆண்டவரை பின்பற்றுகிறவனாய் (சீஷனாய்) இருக்க வேண்டும். அவரை பின்பற்றாமல் அவருடைய ஊழியத்தை செய்ய முடியாது. மேலும் **மாற்கு 3:14** இல் நாம் காண்கிறபடி அவன் ஆண்டவரோடு கூட இருப்பான். எல்லாவற்றிற்க்கும் மேலாக பிதாவானவர் நம்மை கனம் பண்ணுவார். தேவனுக்கு பிரயோஜனமான கனத்திற்குரிய பாத்திரங்களாய் நம்மை மாற்றுவார்.

இப்பொழுது நாம் ஒரு சீஷனுடைய தன்மைகள் சிலவற்றை காண்போம்.

1 கொ 11:1 கூறுகிறது **“நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்”**, கிறிஸ்துவை பின்பற்றுகிறவன் தன்னை பிறர் பின்பற்றதக்க மாதிரியுடையவனாய், கிறிஸ்துவின் அண்டை நடத்துகிறவனாய் இருக்க வேண்டும். இதையே நாம் 2 தெச 3:9 ஆம் வசனத்திலும் காணலாம் **“உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம்”**.

மேலும் எபி 13:7 கூறுகிறது **“தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்”**. இங்கு நாம் காண்கிறபடி ஒரு தேவ பிள்ளையிடத்தில் இருக்கிற விசுவாசம் மற்றவரும் பின்பற்றதக்க விதமாய் காணப்படவேண்டும். மேலும் வெளி 14:4 கூறுகிறது **“ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்”**. இங்கு நாம் காண்கிறது, தேவனுக்கு முதற்பலன்களாக மீட்டுக்கொள்ளபட்டவர்கள், அவர் எங்கே போனாலும் அவரை பின்பற்றுக்கிறவர்களாய் இருக்கிறார்கள் என்பதே.

இறுதியாக எபே 5:1 கூறுகிறது **“ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி”**, இங்கு நாம் காண்கிறபடி எல்லாவற்றிற்க்கும் மேலாக, தேவனுக்கு பிரியமான பிள்ளைகளாய், அவரை பின்பற்ற வேண்டும். வெறும் தேவனை பற்றிய அறிவினாலோ, அச்சத்தினாலோ அல்லது அவரால் எல்லாம் செய்ய / தர முடியும் என்பதினாலோ அல்ல, அவர்மீது உள்ள பிரியத்தினால் அவரை பின்பற்றுகிறவர்களாய் நாம் காணப்படவேண்டும்.

ஏனெனில் மத் 10:42 இல் **“சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்”** என்று கூறியுள்ளபடி, நம் மூலம் தேவனுடைய

ஆசிர்வாதம் மற்றவர்களுக்கு செல்லும் வாய்க்கால்களாய் தேவன் நம்மை மாற்றுவார். தேவன்தாமே இந்த வார்த்தைகளை ஆசிர்வதிப்பாராக. நம் ஒவ்வொருவரையும் தம்முடைய (பூரண) சீஷராய் மாற்றி நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக. அல்லேலூயா, ஆமென்.